**வேதாரண்யம் நகராட்சியின் 2024-ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,**

| | | |
|---|---|---|
| | <u>நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டத் இரங்கல் தீர்மானம்</u><br>வேதாரண்யம் நகராட்சி 6வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. க.பாலசுப்பிரமணியன் அவர்கள் 12.03.2024 அன்று இயற்கை எய்தியதை முன்னிட்டு கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானம். | **தீர்மான எண் 48: அன்னாரது மறைவுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.** |
| **பொருள் எண்.1** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண் – 2248/2023/இ1 , நாள் – 03.01.2024 தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, வேதாரண்யம் நகராட்சி, வார்டு எண் –2 , மகாராஜபுரம் கீழ்பாதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் –2023–2024 ன்கீழ் அமைக்கப்பட்டு வரும் அறிவுசார் மையத்தின் (Knowledge Center) கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படயுள்ளதால், அறிவுசார் மையத்திற்கு Care Taker பணியிடத்தினை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தெரிவிக்கப்பட்டு , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதால், மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டதர்கான விளம்பர கட்டணம் ரூ.19,000 /– ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வங்கி கணக்கில் RTGS மூலம் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> 1.மேற்காணும் பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்திய நடவடிக்கையை மன்றம் அங்கிகரிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2082/2022/இ1) | **தீர்மான எண் 49 : அனுமதிக்கப்பட்டது** |
| **பொருள் எண்.2** | வேதாரண்யம் நகராட்சி பொதுநிதி-2022-2023 ன் கீழ் **ரூ.227.00** இலட்சம் மதிப்பீட்டில் சேதுரஸ்தா மரப்பாலம் முதல் உப்பு சத்தியாகிரகம் நினைவு சின்னம் வரை தார்சாலை அமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் 13.05.2022 அன்றைய நாளிதழில் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்கான விளம்பரக்கட்டணம் செலுத்திடக்கோரி கீழ்கண்டவாறு நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. | **தீர்மான எண் 50 : அனுமதிக்கப்பட்டது** |

| வ.எ. | நாளிதழ் பெயர் | விளம்பர நிறுவன விவரம் | விளம்பரக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | Viduthalai | **M/S Sudha Ads,** | 2,256/- |

| | | | |
|---|---|---|---|
| 2. | Deccan Chronicle | No.55,KSC School Road, Tirupur-641604. | 33,264/- |
| Total ( GST 5% =888+888) | | | 37,296/- |

நகராட்சி பொதுநிதி 2024-25ன்கீழ் மேற்கண்ட விளம்பரக்கட்டணத்தை தொடர்புடைய நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மேற்காணும் பணியின் அவசர,அவசியத்தினை கருத்தில் கொண்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கிகரிக்கலாம்.
2) மேற்காணும் செலவிங்களை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.629/2022/இ1)

**பொருள் எண்.3**

வேதாரண்யம் நகராட்சியில் அலுவலக பணிகளுக்கு பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள 03.10.2023 அன்று E-Tender மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனமான ‘‘உதயம் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ என்ற நிறுவனத்திற்கு அக்டோபர் 2023 முதல் மார்ச்-2024 வரை 6 மாதங்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் மார்ச் -2024 உடன் ஒப்பந்தகாலம் காலம் முடிவடைவதால், அதே நிறுவனத்திற்கு ஏப்ரல் 2024 முதல் ஜூன்-2024 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்ட்ட நிலையில், பாராளுமன்ற பொது தேர்தல்-2024ல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால், ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை இருந்ததால், மேற்படி ‘‘உதயம் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ நிறுவனத்திற்கு தொடர்ந்து ஜூலை-2024 (1 மாதம்) ஒப்பந்த நீட்டிப்பு செய்து பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தொகை ரூ.3.00இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு காலநீட்டிப்பிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1347/2023/இ1

**தீர்மான எண் 51 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித நக.எண்.11919/2022/EA நாள்.31.05.2024 – 15வது மாநில நிதிக்குழு மான்ய நிதி Tied Grant –2023–2024ன் கீழ் பணிக மேற்கொள்ள மதிப்பீடுகள் சமர்ப்பிக்க கேட்கபட்டதற்கிணங்க, கீழ்கண்ட பணிகள் மேற்கொள் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது , மேற்காண் திட்டநிதியில் பணி மேற்கொள்ளப்படஉள்ள ,மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**15TH CFC 2023-24 TIED GRAND**

| வ. | | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ |
|---|---|---|---|

**தீர்மான எண் 52 : பதிவு செய்யப்பட்டது .**

| எண். | | | இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | | Providing Pumping main(160 mm HDPE PIPES -PE 10) to Arkattuthurai 2 lakhs litter Ground level Sump from Gandhi park 15 lakhs litter OHT @ Vedaranyam Municipality | |
| 2. | | Supply and Delivery of Cess pool Tanker sludge Section Hose 4" Dia, 3 Meter length ,10Nos in Vedaranyam Municipality. | |
| | | **கூடுதல்** | |

**15TH CFC 2023-24 TIED GRAND**

| | எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 10 | Providing Culvert and Drain at ward 10 Vannara Street (Unique Code 100013R073) in Vedaranyam municipality | 16.22 |
| | | **கூடுதல்** | **16.22** |

அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1332/2024/இ1)

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 18694/2022/ EA-2 நாள்–13.06.2024 –ல் **15**வது மாநில நிதிக்குழு மான்ய நிதி **Tied Grant –. 2023 2024**ன் கீழ் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | வாகனங்களின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| | Supply and delivery of Water Truck Cabin with Water tank of 9000 litre capacity | **228.16** |
| | Supply and Delivery of 50 HP Engine Power, 2940 CC Engine Capacity with 2100 rpm tractor for lifting water tanker | **8.03** |
| | Supply and delivery of 5000 litre Stainless Steel Water Tanker with 10 Ton trailer | **6.00** |
| | Total | **42.19** |

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1460/2024/இ1)

**தீர்மான எண் 53 :**
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.6**

வேதாரண்யம் நகராட்சியானது **21** வார்டுகளை உள்ளடக்கிய **36.26** ச.கி.மீ பரப்பு உடைய முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பொறியியல் பிரிவு திட்டப்பணி மதிப்பீடுகள் தயார் செய்தல் மற்றும் பணிகளை கண்காணிப்பு பணி மேற்கொள்ள பணி ஆய்வர் பணிக்கும், பொதுப்பிரிவில், பொறியியல் பிரிவில் தட்டச்சு மற்றும் கணிணி பராமரிப்பு பணிக்கும், நகராட்சி பகுதியில் உள்ள மேல்நிலை தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்கும், நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் வாகனம், ஜேசிபி வாகனம், கழிவுநீர் உறிஞ்சி வாகனம், குடிநீர் டிராக்டர், மற்றும் டேங்கர் லாரி வாகனங்களுக்கும், அலுவலக பணி மற்றும் திட்டப்பணிகள் எவ்வித சுணக்கமின்றி பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக கீழ்கண்ட விவரப்படி பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம பணியமர்த்தி கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**28.00/-** இலட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. புள்ளி விவர குறிப்பாளர் - 1
2. தொழில்நுட்ப உதவியாளர் - 2
3. மேல்நிலை தொட்டி இயக்குபவர் - 4
4. தட்டச்சர் - 2
5. ஒட்டுநர் - 6

அலுவலக குறிப்பு **1.** செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க. எண்.1347/23/இ1)**

**தீர்மான எண் 54 : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

வேதாரண்யம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம்(U)-2.0 - 2023-24ன்கீழ் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் வேதாரண்யம் நகராட்சி, சன்னதி கடற்கரை சாயில் உள்ள நுண்ணுயிர் உரகலவை மைய வளாகத்தில் புதிய நுண்ணுயிர் உரகலவை மையம்(MCC) அமைக்கும் பணி மேற்கொள்ள **10.06.2024**அன்று E-Tender மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் **13.06.2024** அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டுத்தொகை ரூ.** | **ஒஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்** | **மதிப்பீட்டி ன்படி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 11 | திரு.ஆர்.இராஜேந்திரன் ஆயக்காரன்புலம். | 222,60,264.12 | 22,59,006.40 | 0 0.056% குறைவு |
| 22 | M/s ஜீவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நாகக்குடையான். | | 22,84,450.50 | 1.070% ஆதிகம் |

**தீர்மான எண் 55 : அங்கீகரிக்கப்பட்டது.**

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.இராஜேந்திரன், ஆயக்காரன்புலம். வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து **0.056** %குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண்.654 /24/இ1)**

**பொருள் எண்.8**

வேதாரண்யம் நகராட்சியில் நாகப்பட்டினம் பாராளுமன்ற மக்களவை தொகுதி MPLADS - 2022-23 ன்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வேதாரண்யம் நகராட்சி, வார்டு எண்-16, உள்ள சாணான்குளம் (எ) வண்ணான் குளத்தில் தடுப்புசுவர் கட்டும் பணி மேற்கொள்ள 10.06.2024 அன்று E-Tender மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 13.06.2024 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஓஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி |
|---|---|---|---|---|
| 11 | திரு.ஆர்.இராஜேந்திரன் ஆயக்காரன்புலம். | 29,83,280.51 | 9,83,124.49 | 0.016% குறைவு |
| 22 | M/s ஜீவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நாகக்குடையான். | | 9,84,385.97 | 0.112% ஆதிகம் |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.இராஜேந்திரன், ஆயக்காரன்புலம். வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து **0.016** %குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 674 /24/இ1)**

**தீர்மான எண் 56 : அங்கீகரிக்கப்பட்டது**

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்.9</td><td>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 10 , திருத்துறைப்பூண்டி ரஸ்தா -ல் இந்நகராட்சியில் D&O பெற்று RBR சுவிட்ச் கட்டிங் கடை நடத்தி வந்த திரு. சு.பாலசுப்ரமணியன் என்பவர் 30.03.2024 அன்று விட்டார். அதன் காரணமாக அவர்பெயரில் நடத்தி வந்த RBR சுவிட்ச் கட்டிங் கடை தொழில் தொடர்ந்து ந இயலாமல் முடப்பட்டுள்ளது . அவர்பெயரில் உள்ள தொழில் உரிமம் மற்றும் தொழில்வரி ஆகியவை தற் நகராட்சியில் பதிவில் இல்லை என்பது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .<br>அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(867/2024/அ1)</td><td>தீர்மான எண் 57 : ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.10</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் 18.06.2024 ஆம் தேதிய காணொளி ஆய்வுச் அறிவுரைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வரப்பட்ட கடித ந.க 844/2023/அ1 நாள்: 18.06.2024 ன் படி நகராட்சியில் வழங்கப்படும் சேவைகளான சொத்து வரி பெயர் மா சொத்து வரி விதித்தல் தொழில் வரி விதிப்பு , பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்குதல் , கட்டிட அ வழங்குதல் மற்றும் வணிக நிறுவன உரிமம் உள்ளிட்ட இதர அனைத்து சேவைகளும் குறித்த காலகெடுவ பயனாளிகளுக்கு வழங்கிட அறிவுறுத்தப்பட்டது .<br>மேற்படி சேவைகளை பயனாளிகளுக்கு வழங்குவது குறித்து உரிய வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தொடர்பு அலுவலர்கள் குறித்த விபரங்களுடன் பொதுமக்கள் அனைவரும் பயனடையுமாறு விளம்பர பதாகைகள் செய்து நகராட்சியில் , நிறுவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது . அதனை தொடர்ந்து விளம்பர பதாகைகள் நிறுவ ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000 /- பொதுநிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .<br>அலுவலக குறிப்பு : - பொதுநிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.859 /2024/அ1)</td><td>தீர்மான எண் 58 : அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்.11</td><td>வேதாரண்யம் நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கில் நிர்வாக நலன் கருத்தில்கொண்டு , நகராட்சிக்கு வரப்படுகின்ற விண்ணப்பங்களுக்கும் மற்றும் சான்றுகள் வழங்கிடவும் கீழ்க்கண்டவாறு கட்டணத்தொகை வசூலித்திட விபரங்கள் பின்வருமாறு :-
<table>
<tr><th>வவ.எண்</th><th>வவிண்ணப்பங்கள்</th><th>ஏஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொகை ரு</th><th>கோரிக்கைகள்</th><th>தொதொகை ரு</th></tr>
<tr><td>11</td><td colspan="3">வருவாய் பிரிவுக்கு வரப்படுகின்ற அனைத்து விண்ணப்பங்களுக்கும் விண்ணப்பக்கட்டணம்</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>ரு 200 /-</td><td>RCC / VLT சொத்துவரி பயர் மாற்றம்</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>ரு 100 /-</td><td>ஓட்டு வீடு / AC Sheet சாத்துவரி பெயர் மாற்றம்</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>ரு 50 /-</td><td>கூரை வீடு சொத்துவரி பெயர் மாற்றம்</td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td>புதிய வரிவிதிப்பு / காலிமனை</td><td>200 /- (ஒரு வரிவிதிப்புக்கு )</td></tr>
</table></td><td>தீர்மான எண் 59 : அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரிவிதிப்பு | |
| | | | சொத்து வரி உட்பட அனைத்து வரியினங்களுக்கும் வரியில்லா சான்று வழங்குதல் | 1000 /- |
| | | | சொத்து வரி - வரிவிதிப்பு சுருக்கம் வழங்குதல் விண்ணப்பக்கட்டணம் | 100 /- (ஆண்டு ஒன்றுகத்) |
| | | | புதிய தொழில் வரி விதிப்பு செய்தல் -விண்ணப்பக்கட்டணம் | 100 /- (வரி விதிப்பு ஒன்றுக்கு) |
| | | | சொத்து வரி விதிப்பு - (பெயர் எழுத்து , கதவெண் உட்பட ) விண்ணப்பக்கட்டணம் | 200 /- வரி விதிப்பு ஒன்றுக்கு) |

மேற்காணும் திருத்திய கட்டணத் தொகையினை நகராட்சியின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காகவும் நகராட்சி சேவைமையத்தில் வசூலித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு **1.** வேதாரண்யம் நகராட்சி முதல்நிலை நகராட்சியாக தேர்வு செய்யப்பட்டு , செயல்படுவதன் அடிப்படையில் வருவாயினை பெருக்கும் நோக்கிலும் நிர்வாக நலனைக் கருத்தில்கொண்டும் மேற்காணும் திருத்திய கட்டணத் தொகையினை 01.07.2024 முதல் நகராட்சி சேவை மையத்தில் வசூலித்திட ஒப்புதல் வழங்கலாம் **.**

**2.** மேற்காணும் விண்ணப்பங்களை அச்சடித்திடும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**.**

**(ந.க 859/24 /அ1)**

| | | |
|---|---|---|
| பொருள் எண்.12 | வேதாரண்யம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் **1** முதல் **21** முடிய அனைத்து வர்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியனை வாகனங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து அதனை செயலாக்கம் செய்யப்படும் இடத்தில் ஒப்படைத்தல் பணியினை ரூ.**273.64** இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள **24.03.2023** அன்று E-tenter மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிட்., சென்னை நிறுவனத்தின் ஒப்பந்த விகிதத்தினை நகர்மன்றம் தனது **31.03.2023-**ம் மாத சாதாரண கூட்ட தீர்மானம் எண்.**240-**ன்படி ஏற்கப்பட்டதை தொடர்ந்து **01.06.2023** முதல் **31.05.2024** முடிய ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள **03.05.2024** அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது**.** | **தீர்மான எண் 60 : அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | மேற்காண் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை வ.எண்.30-ன்படி, ஒப்பந்தபணி உத்தரவு பெற்ற ஓராண்டு காலம் வரை மட்டுமே செல்லத்தக்கது. ஒப்பந்த நிறுவனத்தின் செயல்பாட்டினை பொறுத்தே ஒப்பந்தகாலத்தினை நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றத்தில் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதால் 01.06.2023 முதல் 31.05.2024 முடிய ஓராண்டு காலம் பணி முடித்த ஒப்பந்த நிறுவனம் M/s. சரம் என்விரோ சர்வீஸ் பிரைவேட் லிட்., சென்னை நிறுவனத்தின் பணிக்காலத்தினை பணிநீட்டிப்பு செய்திடக்கோரி 03.06.2024 அன்று கடிதம் வழங்கியுள்ளது.<br>எனவே பொதுசுகாதாரப்பணியின் அவசிய, அவசியத்தினை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1900/2021 எச்.1 நாள்.03.05.2023-யில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி, 01.06.2024 முதல் 31.08.2024 முடிய மேலும் 3 மாதங்களுக்கு மேற்படி ஒப்பந்த நிறுவனம் மூலமே பணிமேற்கொள்ள, நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, 01.06.2024 முதல் 31.08.2024 முடிய M/s. சரம் என்விரோ சர்வீஸ் பிரைவேட் லிட்., சென்னை நிறுவனத்தின்மூலம் அதே பழைய ஒப்பந்த விகிதத்திலேயே 01.06.2024 முதல் 31.08.2024 முடிய பணி மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கிட வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.1900/2021 எச்.1) | |
| பொருள் எண்.13 | வேதாரண்யம் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 31.08.2023 அன்று E-Tender மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனமான "சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்" என்ற நிறுவனத்திற்கு செப்டம்பர்-2023 முதல் பிப்ரவரி-2024 முடிய ஆறுமாதங்களுக்கு டெங்குபுழு ஒழிப்பு பணி மேற்கொள்ள 05.09.2023 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு, ஒப்பந்தக்காலம் பிப்ரவரி-2024 மாதத்துடன் முடிவடைந்ததால், டெங்கு தடுப்பு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் தொடர்ச்சியாக செய்ய வேண்டியிருந்ததால் நகர்மன்றத்தின் அனுமதி (தீர்மானம் எண்.26/நாள்.29.02.2024) பெற்று மேலும் மார்ச்-2024 முதல் மே-2024 முடிய மேற்படி ஒப்பந்த நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. இனிவருங்காலங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டு டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் காலங்களில் மேற்கண்ட ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் அதே ஒப்பந்த விகிதத்திலேயே பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்காகும் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: பொதுசுகாதார பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1441/2023 எச்.1) | **தீர்மான எண் 61 : அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்.14 | வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட இலகுரக வாகனங்களுக்கான காப்பீட்டுத்தொகை சென்ற ஆண்டு வாகனங்களை விநியோகம் செய்த வி.வி. மோட்டார்ஸ், திருவாரூர் நிறுவனத்தால் "கொரமண்டலம் எம்.எஸ். ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனம்" மூலம் | **தீர்மான எண் 62 : அனுமதிக்கப்பட்டது.** |

தொகை செலுத்தப்பட்டு காப்பீட்டுக்காலம் **19.06.2023** முதல் **18.06.2024** நள்ளிரவு வரை அனுமதி வழங்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | LCV | TN51AS4003 | 21892 | |
| | LCV | TN51AS4009 | 21892 | **19.06.2023** முதல் **18.06.2024** நள்ளிரவு வரை |
| | LCV | TN51AS4020 | 21892 | |
| | LCV | TN51AS4021 | 21892 | |
| | LCV | TN51AS4023 | 21892 | |
| | LCV | TN51AS4025 | 21892 | |
| | LCV | TN51AS4056 | 21892 | |
| | LCV | TN51AS4065 | 21892 | |
| | LCV | TN51AS4072 | 21892 | |
| | LCV | TN51AS4003 | 21892 | |

தற்போது **18.06.2024** உடன் காப்பீடு முடிவடைவதால், மேற்கண்ட வாகனங்களுக்கு நகராட்சியால் "United Indis Insurance Pvt. Ltd.," நிறுவனத்தின் மூலம் செலுத்திட Insurance Calculation work sheet கீழ்க்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ளது.

| வ.எ. | வாகனத்தின் விவரம் | வாகனத்தின் பதிவு எண் | காப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | LCV | TN51AS4003 | 21618 |
| 2 | LCV | TN51AS4009 | 21618 |
| 3 | LCV | TN51AS4020 | 21618 |
| 4 | LCV | TN51AS4021 | 21618 |
| 5 | LCV | TN51AS4023 | 21618 |
| 6 | LCV | TN51AS4025 | 21618 |
| 7 | LCV | TN51AS4056 | 21618 |
| 8 | LCV | TN51AS4065 | 21618 |
| 9 | LCV | TN51AS4072 | 21618 |
| | | கூடுதல் | 194562 |

(அ) எனவே மேற்கண்ட இலகுரக வாகனங்களுக்கான காப்பீட்டுத்தொகை ரூ.**1,94,562/-**ஐ "United Indis Insurance Pvt. Ltd.," நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.**3** மற்றும் **4**-க்கான தொகை ரூ.**43,236/-**ஐ தவிர்த்து மீதமுள்ள வாகனங்களுக்காக செலுத்தப்படும் காப்பீட்டுத்தொகை ரூ.**1,51,326/-**ஐ மேற்கண்ட வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வரும் தூய்மைப்பணி வெளிக்கொணர்வு முகைமை ஒப்பந்த நிறுவனம் M/s. சரம் என்விரோ சர்வீஸ் பிரைவேட். லிட்., சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஜூன்-**2024**ம் மாத தொகைப்பட்டியலில் பிடித்தம் செய்து பொதுநிதிக்கணக்கில் வரவு வைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பொதுசுகாதார பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1123/2024 எச்.1)

**பொருள் எண்.15**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சார்பாக பசுமை திட்டத்தின் கீழ் மரக்கன்று நடுவதற்கு அறிவுறுத்தப்பட்டு அதனை தொடர்ந்து வேதாரண்ய நகராட்சியின் சார்பாக நகர் பகுதியில் முழுமையாக மரக்கன்று நடுவதற்கு மரக்கன்றுகள் வாங்கிட விளைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனம் இருந்து விலை புள்ளிகள் பெபெறப்பட்டுள்ளது மன்றத்தின் பாருக்கு ஒப்புதலுக்கும்

| வ. எண். | மரக்கன்றுகளின் வகை | எண்ணிக்கை | ExNoRa Internations, வேதாரண்யம் | இனியவன் நர்சரி கார்டன், கத்தரிப்புலம் | ப்ரியத் நர்சரி கார்டன், வேதாரண்யம் |
|---|---|---|---|---|---|
| 1. | வேம்பு, புங்கன், புளி, மகிழம், மலை வேம்பு, நாவல்,நெல்லி, இலுப்பை ,அத்தி, இலந்தை, கொடுக்காபுள்ளி, வில்வம், கல்யாண முருங்கை, சொர்க்க மரம் | செடி 1–க்கு | 16.00 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன்) | 18.00 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன்) | 19.00 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன்) |
| 2 | பனை விதை பந்து | 1 | 2.00 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன் | 2.50 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன் | 3.00 (மூன்று மாதங்கள் பராமரிப்புடன் |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல்படி M/s ExNoRa Internations, வேதாரண்யம் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1 ) மன்றம் அனுமதிக்கலா'ம்.

2) பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s ExNoRa Internations, வேதாரண்யம். என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.2517/2023/இ1)**

**தீர்மான எண் 63 : அங்கீகரிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td>பொருள் எண்.16</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 31614/2023/ தி-2 நாள்–19.06.2024 –ல் நமக்கு நாமே திட்டம் –2023–2024ன் கீழ் (CS 100%)கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th></th><th>பணி விவரம்</th><th>மமதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில் )</th></tr>
<tr><td></td><td>Wood Chipper Machine பயன்படுத்த புதிய டிராக்டர் வாகனம் வாங்கும் பணி.</td><td>8.05</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>
(ந.க.எண். 1506/2024/இ1)</td>
<td>தீர்மான எண் 64 : பதிவ செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.17</td>
<td>இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து வங்கிககணக்குகளுக்கு இறுதி இருப்பு இணக்க சான்று தயாரித்தல், வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதிக்கான வரவு-செலவு அட்டவணை தயாரித்தல் மற்றும் 2022-23 ம் ஆண்டிற்கான ஆண்டுக்கணக்குகள் தயாரித்து வழங்கிட 05.12.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விகிதம் (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>G.S. ஆடிட் அசோசியேட்ஸ், திருத்துறைப்பூண்டி</td><td>35000/-</td></tr>
<tr><td>2.</td><td>கிரிஸ்டல் ஆடிட் அசோசியேட்ஸ், மருதூா் தெற்கு</td><td>50000/-</td></tr>
<tr><td>3.</td><td>ஆர்.கே. அசோசியேட்ஸ், நாகப்பட்டினம்</td><td>60000/-</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள G.S. ஆடிட் அசோசியேட்ஸ், திருத்துறைப்பூண்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் உள்ள G.S. ஆடிட் அசோசியேட்ஸ், திருத்துறைப்பூண்டி நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
2. இச்செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>
ந.க.எண்.1457/2024/பி2</td>
<td>தீர்மான எண் 65 : அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td>பொருள் எண்.18</td><td>வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் மேலாண்மையின்கீழ் இயங்கி வரும் கனரக வாகனங்கள் TN-51H-7443 மற்றும் TN-51J-1570 ஆகிய இரண்டு வாகனங்களின் வருடாந்திர அனுமதி சான்று பெற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி சான்றினை நகராட்சியால் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தொகை செலுத்தி பெற வழிவகை இல்லை என்பதால் வேதாரண்யத்தில் உள்ள "Sami Driving School" மூலம் அனுமதி சான்று பெறவும், அதற்கான பசுமைவரி செலுத்திடவும் ஆகும் மொத்த செலவுத்தொகை ரூ.21,036/- ஐ பொதுநிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: பொதுசுகாதார பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1356/2024 எச்.1)</td><td>தீர்மான எண் 66 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.19</td><td>வேதாரண்யம் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 2024-25ம் நிதியாண்டிற்கு தேவையான இட்லி டோக்கன், தயிர் சாதம் டோக்கன், சாம்பார் சாதம் டோக்கன் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் கொள்முதல் செய்ய ஆகும் கூடுதல் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட பணிகளை கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டகோ சர்வ் & லிட் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(1980/2022/எப்1)<br>(ந.க.எண்.19/2024/எப்1)</td><td>தீர்மான எண் 67 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.20</td><td>வேதாரணியம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளில் மற்றும் பிரிண்டர்களில் பழுதுகளை சரி செய்து புதியதாக RAM/Motherboard மாற்றுதல் மற்றும் Toner, Ribbon Cadridge போன்றவை வாங்கிட வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.38000/– ஆகும். மேற்படி பணிகளின் அவசரம், அவசியத்தை கருத்தில் கொண்டு, விலைப்புள்ளியில் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும். ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ, எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>M/s ஸ்பைடர் டெக்னாலஜி,சேலம்.</td><td>ரூ.37550/–</td></tr>
<tr><td>2.</td><td>M/s ராஜ் கம்பியூட்டர்ஸ், சேலம்.</td><td>ரூ. 39080/–</td></tr>
<tr><td>3.</td><td>M/s வீனஸ் டெக்,சேலம்.</td><td>ரூ.39575/–</td></tr>
</table>
<br>மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரித்ததில் வரிசை எண். 1ல் உள்ள M/s ஸ்பைடர் டெக்னாலஜி, சேலம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :1 ) மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி, செலவினங்களை வருவாய்</td><td>தீர்மான எண் 68 : அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண். 1ல் உள்ள M/s ஸ்பைடர் டெக்னாலஜி, சேலம் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.2517/2023/இ1)**

பொருள் எண்.21

வேதாரண்யம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக புதிய டிராக்டர் வாகனம் வாங்க கோயம்புத்தூர் பிரித்வி இன்னர் வியர் நிறுவனத்தின் CSR நிதியில் இந்நகராட்சிக்கு ரூ.9.57 இலட் வழங்கப்பட்டதை தொடர்ந்து, GeM விலை விகிதத்தில் புதிய டிராக்டர் வாகனம் வாங்கிடவும், அதற்கா வாகன பதிவுகள் மற்றும் இதர செலவினங்களை மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள CSR நிதிய மேற்கொள்ளவும் இந்நகரமன்ற தீர்மான எண்– 45 நாள் –11.03.2024–ல் ஒப்புதல் வழங்கப்பட் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்–31614/2023/ 2 நாள்–19.06.2024 –ல் நமக்கு நாமே திட்டம் **–2023–2024**ன் கீழ் **(CSR 100%)** அனு வழங்கப்பட்டுள்ளது. **எனவே,** நமக்கு நாமே திட்டம்–2023–2024–ன் கீழ் திடக்கழிவு மேலாண் பணிக்கு wood chipper machine பயன்படுத்த புதிய டிராக்டர்(Tractor)வாகனம் வாங்கிட விலைப்புள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து, விலை புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தி பார்வைக்கும்,ஒப்புதலுக்கும்.

| **Sl.No** | **Item of Bill of Quantities** | M/S GEO TRACTORS, THIRUVARUR | M/S VIJIE AND MAIEETH TRACTORS, THANJAVUR | M/S SAKTHI MOTORS PATTUKKOTTAI |
|---|---|---|---|---|
| | | Rate in Rs. | Rate in Rs. | Rate in Rs. |
| 1 | MASSEY FERGUSON (MF) MF-7250 DI /HP-46 Tractor ( Supply -1 Number) | **945840.00** | **955900.00** | **952500.00** |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல்படி **M/S GEO TRACTORS,THIRUVARUR** – நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1 ) மன்றம் அனுமதிக்கலா'ம்.

2) பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/S GEO TRACTORS, THIRUVARUR** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம்

**தீர்மான எண் 69 : அங்கீகரிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண். 1506/2024/இ1)** | |
| பொருள் எண்.22 | வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் எல்லை பெயர் பலகைகள், முக்கிய சாலைகளில் பெயர் பலகைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் முற்றிலும் சேதமடைந்து உள்ளதால், அதனை சரி செய்திட நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆகியோரின் ஆய்வின்போது வழங்கப்பட்ட அறிவுரைகள்படியும், ஆணையர் அவர்களின் அறிவுரைகள்படியும் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/- இலட்சம் ஆகும். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க. எண்.1462 /23/இ1)** | **தீர்மான எண் 70 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.23 | வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்-1 முதல் 21 வரை உள்ள சில பகுதியில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் நீர் ஆதார குடிநீர் மூலம் வழங்கப்படும் குடிநீர்அளவு குறைவாக உள்ளதால், அப்பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் சரிவர விநியோகம் செய்யப்படாமல் உள்ளது. எனவே, நகர்மன்றத் தலைவர், ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் களஆய்வில் வழங்கிய அறிவுரைகளின்படியும், பொதுமக்களின் அத்தியாவசிய நலனை கருத்தில் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் டேங்கர் லாரி மூலம் வழங்கிட ஏதுவாக வாடகை அடிப்படையில் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்திட ஆகும் உத்சேத செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க. எண். 1607 /2023/இ1)** | **தீர்மான எண் 71 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.24 | மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சி ஆய்வாளர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறை ந.க.எண்– 2429/அ4/ 2022 /உ.இ (ஊ) –நாள் 04.05.2023 உத்தரவின்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் பராமரிப்பில் இருந்த பள்ளிகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மூன்றாம் தெரு , பள்ளியில் நடப்பு கல்வியாண்டில் , Samart Class வகுப்பறை , ஆய்வகம் போன்ற கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் மின் பயன்பாடு அதிகரித்துள்ளது, ஏற்கனவே ஏற்கனவே உள்ள ஒரு முனை மின்இணைப்பினை( EB.No–0651000654) மும் முனை மின் இணைப்பாக ( Three phase) மாற்றிட தமிழ் நாடு மின்சார வாரியத்திற்க்கு Online –ல் விண்ணபித்ததின்படி , விண்ணப்ப கட்டணமாக ரூ. 9,440/– செலுத்திட தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி, விண்ணப்ப கட்டணத்தை பொது நிதியில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படு கிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1 ) மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி, செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண் 72 : அனுமதிக்கப்பட்டது** |

(ந.க.எண்.1283/20214/இ1)

பொருள் எண்.25

வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சொத்து வரியினை வசூலித்திட பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட , தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் உள்ளாட்சிகள் சட்டம் பிரிவு 84 (1) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள்-2023 ன்படி , 2024 ஏப்ரல் 30 க்குள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரி செலுத்துவோருக்கு சொத்து வரியில் 5 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் விபரத்தினை பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வரித்தெகையினை வசூலித்திட பொது மக்களுக்கு அறிவிப்புகள் வழங்கிடவும் , விளம்பர போர்டுகள் வைத்திடவும் 3 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பட்டுள்ளது .

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | | அறிவிப்பு & விளம்பர பலகை தொகை ரு | எண்ணிக்கை | தொகை ரு |
|---|---|---|---|---|---|
| 1 | G.S.Designs , Nagapattinam | Notice | 0.96 பைசா | 5000 | 4800 /- |
| | | Flex | ரு . 450 | 4 | 1800 /- |
| 2 | G.J.S.Digital photos &videos, Nagapattinam | Notice | ரு 1 /- | 5000 | 5000 /- |
| | | Flex | ரு 500 /- | 4 | 2000 /- |
| 3 | Sadhana designs , Nagapattinam | Notice | ரு 1.10 /- | 5000 | 5500 /- |
| | | Flex | ரு 550 /- | 4 | 2200 /- |

மேற்காணும் 3 நிறுவனங்களிலிருந்து வரப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வரப்பட்ட G.S.Designs , Nagapattinam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்று அனுமதி வழங்கிட வைக்கப்படுகிறது .

அ.கு :-

1. குறைந்த விலைப்புள்ளி வரப்பட்ட G.S.Designs , Nagapattinam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம் .
3. அறிவிப்புகள் , விளம்பர பலகைகள் , மற்றும் வசூல்பணி மேற்கொள்ளும் உத்தேச செலவினங்கள் ரு . 20000 /- , பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 73 : அனுமதிக்கப்பட்டது**

ஒம்/–
மா.மீ.புகழேந்தி
நகர்மன்றத் தலைவர்